Makkal Kural 04.10.2017

# கீழாநெல்லி, நிலவேம்பு உள்ளிட்ட 32 வகை மருத்துவ தாவரங்களை பயிரிடுங்கள்

## விவசாயிகளுக்கு அமைச்சர் வேண்டுகோள்

சென்னை, அக். 4–

நம்முடைய பாரம்பரிய முறைப்படி இயற்கை மூலிகை தாவரங்களில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகளை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என வனத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மருத்துவ தாவரங்கள் சாகுபடி, மதிப்பு கூட்டல் மற்றும் வர்த்தகம் தொடர்பான தற்போதைய நிலை மற்றும் எதிர்காலம் குறித்த தேசிய பயிலரங்கம் வண்டலூரை அடுத்த கொளப்பாக்கத்தில் உள்ள மாநில வன ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. தேசிய பயிலரங்கத்துக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலாளர் முகமது நசிமுதின் தலைமை தாங்கினார்.



இதில் வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் கலந்து கொண்டு பயிலரங்கை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து பேசியதாவது:

ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி போன்ற மருத்துவ முறையில் 90 சதவீதம் இயற்கை மூலிகை தாவரம் பயன்படுத்தப்படுகிறது. நமது நாட்டில் விளையும் 15 ஆயிரம் வகை தாவரம் மருத்துவ குணம் கொண்டது. நமது முன்னோர்கள் இயற்கையாக பாரம்பாரிய முறையில் வைத்தியம் பார்த்து வந்தனர். அப்போது சுகப்பிரசவம் அதிகமாக நடந்தது. தற்போது அதிகளவில் சிசேரியன் நடக்கிறது.

தற்போது முக்கிய பிரச்சினையாக உள்ள டெங்கு பாதிப்பில் இருந்து காப்பாற்ற நிலவேம்பு முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே மூலிகை தாவரங்கள் மூலம் தயாரிக்கப்படும் மருத்துகளை அதிகம் பயன் படுத்த வேண்டும். நம்முடைய மூலிகை தாவரங்களை கொண்டு வெளிநாட்டினர் பெயர் மாற்றம் செய்து அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். வியாபார உத்திகள் மூலம் விற்பனை செய்து நல்ல லாபம் அடைகின்றனர். நம்முடைய இயற்கை மருந்து தாவரம் ரூ.40 கோடி அளவில் தூத்துக்குடி துறை முகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தற்போது அதிகளவில் மருத்துவ தாவரங்களின் சந்தை வணிகம் பெருகி வருகிறது. நெல்லி, அசோகு, கீழாநெல்லி, சிறுகுறிஞ்சான், நிலவேம்பு, மணத்தக்காளி, துளசி உள்ளிட்ட 32 வகை மருத்துவ தாவரங்களை வணிக நோக்கில் பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டும். பயிலரங்கில் பங்கேற்ற பல துறையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் விவசாயிகளைச் சந்தித்து மூலிகை தாவரங்களை அதிகளவில் பயிரிட மற்றும் அதனை சந்தை படுத்தும் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

விவசாயிகள் வருவாய் பெருக்கத்தின் மூலம் நாடு பசுமையாக மாறும். அடுக்குமாடி குடியிருப்புகளிலும் சிறிய அளவில் மூலிகை தாவரங்களை நாம் பயிரிட வேண்டும். அதற்கு அரசு விதைகளை வழங்கும். சைவ உணவு வகைகளை அதிகம் பயன்படுத்த வேண்டும். இயற்கை முறையில் தாவரங்கள் மூலம் தயாராகும் பொருட்களை அதிகம் பயன் படுத்த வேண்டும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக தொழிற் துறை அமைச்சர் பெஞ்சமின், முதன்மை தலைமை வனபாதுகாவலர் ஹி.பசவராஜீ, ஆராய்ச்சி மற்றும் கல்வி முதன்மை தலைமை வன பாதுகாவலர் ஆர்.கே.உபாத்யாய், தலைமை வனபாதுகாவலர் (ஆராய்ச்சி) மித்தா பானர்ஜி மற்றும் விவசாயிகள், மருந்துப் பொருட்கள் உற்பத்தியாளர்கள், வனத்துறை அதிகாரிகள், அலுவலர் கள் பலரும் கலந்து கொண் ட னர்.